25

Regd. No. M. 378.

தொகுதி 10. பகுதி 1.

# பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம்
இவைகளைப் பரவச்செய்யும்
ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை

1919௵ மே௴—சித்தார்த்தி ௵ வைகாசி ௴

5 - MAR 1924

விஷயங்கள்


| | | |
|---|---|---|
| 1. | தற்கால நிலைமை—ஆர். அரங்கஸ்வாமி ஐயர், பி. ஏ. | 1 |
| 2. | சாரணர் பக்கம். ... ... | 8 |
| 3. | கஷ்டமும் சக்தியும்—அன்னி பெஸண்டு ... | 9 |
| 4. | ஆத்மார்த்தக் கல்வி அவசியம்–கே. எஸ். இராமசந்திரையர் | 15 |
| 5. | பெற்றோர் உபாத்தியார் சங்கம்—வி. ஜினராஜ தாஸர் | 23 |
| 6. | ஷை 1918௵ அறிக்கை ... | 25 |
| 7. | ஸ்திரீகள்—மிஸ். கே. ப்ரௌனிங் ... | 26 |
| 8. | பத்திரிகை விமர்சம் ... | 28 |
| 9. | புத்தக விமர்சம் ... | 29 |
| 10. | சமாசாரம் ... | 31 |


அ. அரங்கசாமி ஐயர் பி. ஏ., பி. எல். பத்திராதிபர்

தபால் சார்ஜ் உள்பட வருஷச் சந்தா இந்தியாவுக்கு ரூ 2
அன்னிய நாடுகளுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா 4
மதுரை விக்டோரியா அச்சியந்திர சாலை

Copy-right Reserved.

## இந்தியாவில் மிகப்பெரிதும் பழமையுமான வைத்யசாலை எது?

188[illegible]-ஷும் ஜாம் நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

# ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்

குழந்தைகளுக்கு சகலரோகங்களையும் குணப்படுத்தும்

சஞ்சீவி

பாலமித்ர

300 மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு ரூபா 1

வியாதியைப்பற்றி விபரமாய்தெரிவிப்போர்க்கு நன்ருய் ஆலோசனைசெய்து திருப்தியான விடை கொடுக்கிறோம்.

கடிதங்களுக்கு உடனே பதில் எழுதப்படும்

இந்த

ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பட்டம்பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சம்பன்னர்களும் நிறைமவாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம் செய்கிருர்கள்.

முதன்மையான

மருந்து சென்ற 35 வருஷ காலமாய் உபயோகிப் போருக்கு அற்புத குணத்தைக் கொடுத்தது தேகபலத்தையும் பலனையும் கொடுத்து பெருப்புகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

32 மாத்ரையின் விலை ரூ 1

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ
ஆதங்க நிக்கிரக
ஔஷதாலயம்
45, மேலக் கோபுர வீதி
மதுரை.

இருமல், கபம் காசம் இவைகளுக்கு சிறந்தமருந்து

காசாந்தக

மாத்ரைகள் டப்பிக்குவிலை ரூ[illegible]

இதுவரை எங்கள் கேட்லாக்கை பார்த்திராவிடில் உடனே உங்கள் விலாசத்தை எழுதுங்கள் எவ்வித செலவில்லாமலும் இனமாய் அனுப்புகிறோம்

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 10 | சித்தார்த்தி௵ வைகாசி௴ 1919௵ மே௴ | பகுதி 1

## தற்கால நிலைமை.

இப்பத்திரிகையானது இப் பகுதியோடு 10 ஆவது தொகுதியை ஆரம்பிக்கின்றது. சென்ற ஒன்பது வருஷங்களாக மதவிஷயமாயும், கல்வி விஷயமாயும், சாஸ்திர விஷயமாயும், யோகசாஸ்திர விஷயமாயும், பக்திபரமாயும், சகோதரபாவப் பிரகாசமாயும், அநேகம் அரிய பெரிய வியாஸங்கள் இப்பத்திரிகையில் வெளிவந்திருக்கின்றன. அவ்வரிய வியாஸங்களில் பலவற்றைப் புத்தக ரூபமாயும் துண்டுப் புத்தகரூபமாயும் அச்சிட்டு தமிழுலகுக்கு ஈந்திருக்கிறோம். இப்பத்திரிக்கையில் பிரசுரமாகும் விஷயங்களைப் பெரிதும் அபிமானித்து விரும்புகிறவர்கள் அநேகர் மௌனவாக்கு, பதஞ்சலி யோகசூத்திரம் முதலிய புஸ்தகங்களை அனுப்பவேண்டும் என்று ஒவ்வொரு தினமும் கேட்டுவருகின்றனர். ஆனால் எம்மால் பிரசுரிக்கப்பெற்ற புஸ்தகங்களில் மேற்கூறிய இரண்டு புஸ்தகங்களும், இன்னும் சிலவும் முழுமையும் செலவாய் விட்டனவாகையால் சீக்கிரம் மறுபதிப்பை வெளியிடமுயன்று கொண்டிருக்கிறோம்.

இப்போது துவங்கும் 10 ஆவது வருஷத்திலும் முன்போலவே உலகக்ஷேமத்தை நாடும் சிறந்த விஷயங்களையே எமது பத்திரிகையில் பிரசுரிப்போம். குழந்தைகளை வளர்ப்பதில் பெற்றோரும், கற்பிப்பதில் உபாத்திமாரும் தேக சிக்ஷை செய்து வருகிறார்கள் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். அத்தீய வழக்கத்தை அடியோடு ஒழித்து விடவேண்டும் என்ற தீர்மானங்கொண்டு பெற்றோர் உபாத்திமார் சங்கம் ஒன்று இந்தியாவில் ஸ்தாபிக்கப் பெற்றிருக்கிறது என்பது நேயர்கள் அறிந்த விஷயம். அச்சங்கத்தார் அரிய சிறுபுத்தகங்களைப் பிரசுரம் செய்திருக்கிறார்கள். பண்டை முறை தவறு என்றும் புதியமுறை சரி யென்றும் அறிவு பெருகினால் ஒழிய இத்தீய வழக்கம் நீங்காதாகையால் அச்சங்கத்தார் கொள்கைகளை விளக்கும் வண்ணம் வியாஸங்களும், மொழி பெயர்ப்புகளும் இப்பத்திரிகையில் இவ்வருஷம் வெளிவரும். பின்னர் தேவையிருக்கும் பக்ஷத்தில் அவ்வியாஸங்களைத் திரட்டி புத்தகமாய் வெளியிடுவோம். குழந்தைகளுக்கு ஏற்ற கதைகளும் சாரணர் விருத்தாந்தங்களும் தேசீயக் கல்வியைப் பற்றிய வியாஸங்களும், உயர் நலம் வாய்ந்த மற்றைவிஷயங்களும், வெளிவரும்.

***

நம் நாடு பண்டைக் காலத்தில் சிறப்புற்று விளங்கியது என்பது சொல்லாமலே அமையும். ஆனால் நமது மூதாதைகளுடைய பெருமையையே எஞ்ஞான்றும் புகழ்ந்து கொண்டு தற்காலத்தில் நாமிழிந்த தசையுற்றோம் என்றும், இனி மேன்மேலும் கீழான நிலைமைக்கே வந்து விடுவோம் என்றும் நம்புகிறது நமது கொள்கையல்ல. ஈசுவரனுடைய ஆணையைத் தலைமேல் கொண்ட அதிகாரிகளால் உலகமானது நடத்தப்பட்டுவருகிறது. இப்போது ஒரு காலம் மாறி மற்றொரு காலம் வருவதற்கு இடையிலுள்ள சந்தியாகாலம். இந்த யுத்தத்திற்குப் பிறகு புதிய நோக்கங்களும், பாவங்களும், உலகத்தில் பரவப்போகின்றன. உலக

மே புதிய மாதிரியாய் அமையப்போகின்றது. அப்புதமாதிரி அமைப்பில் இந்தியாவானது புரியவேண்டிய கைங்கரியமானது மிகவும் முக்கியமானது. அக்கைங்கரியமானது செவ்வனே நடைபெறும் வண்ணம் இந்தியாவின் நிலைமையே முன்னேற்றத்தை யடையப் போகின்றது. ஏற்கனவே இந்தியா மந்திரி யானவர் செய்திருக்கும் பிரசங்கத்திலிருந்து உலகத்தில் உள்ள தேசஜாதியார்களுக்குள் மிகவும் பிரதானமான ஐந்து ராஜாங்கங்களைத் தவிர மற்றவர்களுக்குள் இந்தியாவுக்கு அளிக்கப்பட்டிருக்கும் ஸ்தானமானது மற்றவர்களது ஸ்தானத்தை விடக் குறைவுப் பட்டதில்லையென்றும், ஆனால் முதன்மையானதே யென்றும் அறிகிறோம். கூடிய சீக்கிரம் கிடைக்கப்போகிற சீர்திருத்தங்களாலும் இந்தியாவின் நிலைமையானது மேன்மையடையும் என்று நம்புகிறோம். தற்காலத்திற்கு ஏற்ப நமது பழக்க வழக்கங்களை நாம் சீர்திருத்திக்கொள்ளவேண்டும். அதாவது முற் காலத்திய ஆசாரங்களின் ஜீவதத்துவங்களையே இக்காலத்திய வழக்கங்களில் புகுத்தி, இக்காலத்திற்கு ஏற்ப மாற்றிக்கொள்ளவேண்டும். ஆகையால் இப்புதுத் தொகுதியைத் துவக்கும்போது உற்சாகத்துடனும், குதூகலத்துடனும், நம்பிக்கையுடனும் துவங்குவோம். நம்நாடானது தனது உயர்பதவியை வகிக்கும் வண்ணம் நாமும் நம்மாலியன்ற உதவியைப்புரியும்படி இறைவன் எமக்குப் போதுமான அறிவையும் சக்தியையும் அருளுவாராக.

***

ஆங்கிலத்தில் பிரசுரமாகும் இந்தியப் பத்திரிகைகளில் முதன்மையானது என்று சொல்லத்தகும் 'மாடர்ன் ரிவியூ' என்ற பத்திரிகையின் மே மாதப் பகுதியில் ஹிந்து மதத்திற்கு நேர்ந்திருக்கும் அபாயத்தைப்பற்றி ஒரு நிருபர் கூறியிருக்கிறார். அது நமது கவனத்துக்கு ஏற்றதொரு விஷயமாகையால் அதை இங்குப் பார்வையிடுவோம். ஸ்ரீமான் ஹாலண்டு என்ற பாதிரி ஒருவர் "இந்தியா எதை நோக்கிச்செல்லுகிறது" என்று ஒரு புஸ்தகம் எழுதியிருக்

கிறார். கிறிஸ்தவமதம் தான் உலகத்தில் சிறந்த தென்றும், இந்திய ரனைவரும் ஒரு நாள் கிறிஸ்தவராய் மாறுவர் என்றும் கூறுகிறார். இவ்வெண்ணமானது ஒருக்காலும் முற்றிலும் நிறைவேறாது என்று திண்ணமாய்ச்சொல்லலாம். எனினும், ஏனைய பாதிரிமார் புஸ்தகங்களைப்போல் இதை யும் அலக்ஷ்யம் செய்தல் அடுக்காது. ஏன் எனில், இந்தி யாவை அனுதாபத்துடன் அறிய முயன்றவரில் இவர் ஒருவர். இந்தியர்களின் சீரியகுணங்களை இவர் மெச்சு கிறார். ஸ்தலங்கள் தோறும் சென்று தீர்த்தாடனம் செய் யும் யாத்திரைக்காரரின் ஆஸ்திக்கியம், ஸ்ந்தாகவும் அந்தர் யாமியாயும் இருக்கும், பிரஹ்மத்தையே தியானம் செய்து கொண்டிருக்கும் யோகிகளின் இஹலோக வைமுக்கியம் தபஸ்விகளின் ஆத்மபரித்யாகம், ஸன்யாஸிகளுடையவும் பரதேசிகளுடையவும் பரலோகத்தை நாடும் பான்மை, ஐஹிக விஷயங்களில் பாராமுகம், பொன்னைக் கல்லுக்குச் சமமாய்ப் பார்க்கும் இயல்பு, ஆகாராதி சுகங்களை வெறுத் தல், பரமனை எங்கும் பார்த்தல், பக்தி, நித்தியகர்மங்கள் யாவற்றையும் ஈசுவர கைங்கரியமாய்ப் பார்க்கும் புத்தி, எப்போதும் எங்கணும் ஈசனையே நாடும் ஊக்கம், தயாள குணம், அதிதிகளுக்கு உபசாரம், தர்மசிந்தை, பொறுமை யின் வலிமை, மென்மையின் பெருமை, சாந்தத்தின் மேன்மை, வணக்கத்தின் உயர்வு—இவ்வுத்தமகுணங்களை யெல்லாம் நன்கு உணர்ந்து அவைகளை ஏற்றபடி ஒத்துக் கொள்ளுகிறார். ஆகையால் இவர் கண்டபடி பிதற்றுகிறார் என்று சொல்வதிற் கில்லை. எதிராளியின் பலத்தை ஒத்துக் கொள்ளுகிறவருடன் வாதாடும்போது அவருடைய பலத் தையும் நாம் ஒத்துக்கொள்ளாமலிருக்க முடியுமோ?

***

ஸ்ரீமான் ஹாலண்டு கூறுவதில் முக்கியமான ஒரு விஷயம் யாதெனில், கிராமம் கிராமமாய் கிறிஸ்தவ மதத் தில் சேருகிறார்கள் என்பது. நாள் ஒன்றுக்கு 850 பேர்

விழுக்காடு அதாவது மாதம் ஒன்றுக்கு 10, 000 பேராக கிறிஸ்தவராய் சேர்வதாகக் கூறுகிறார். இதே ரீதியாய்ப் பல மாதங்கள் நடந்தால் எவ்வளவு விரைவில் இந்தியாவில் கிறிஸ்தவர்கள் சங்கை ஏறும்? ஹிந்துக் களின் சங்கை குறையும்? யார் இப்படிக் கிறிஸ்தவர்களாகி றார்கள் என்றால், நாம் தீண்டா ஜாதியார் என்றும் தள்ளு ண்ட ஜாதியார் என்றும் அவமதித்து வருகிறோமோ அவர் கள் தான் நூற்றுக்கணக்காயும், கிராமக்கணக்காயும் கிறிஸ்தவர்களாய் மாறுகிறார்கள். இதே வேகத்தோடு அவர்கள் முகம்மதியர்களாயும் மாறுகிறார்கள். இக்கால மோ ஒவ்வொரு ஜீவனுடையவும் அகங்காரம் தடிக்கும் காலம். சில வருஷங்களுக்கு முன் வணக்க ஒடுக்கமாய் இரு ந்தவர்கள் இப்போது தலை நிமிர்ந்து கண்யமாய் நடப்பதை நாம் காண்கிறோம். இது சிலாக்கியமான விஷயமே யொழிய வருத்தத்திற்குக் காரணமில்லை. அம்மாதிரியே தீண்டா ஜா தியாரும் இவ்வித உணர்ச்சியால் தாக்குண்டு இருப்பது என்ன ஆச்சரியம்? உலகம் முழுவதும் ஒரு விதமான மாறுதல் அடைந்திருக்கும் போது, மேலும், மேல் நாட்டி லே தொழிலாளிகளுடைய ஆக்கம் மிகுந்திருக்கும் காலத் திலே, இந்தியாவிலும் அதேவிதமான ஸ்புரணம் இல்லா மல் இருக்காது. தீண்டா ஜாதியார் தாமும் மனிதர்கள், தாமும் மனிதர்க்குள்ள கண்யதையை அடைய பாத்தியஸ் தர்கள் என்று எண்ணிவருகிறார்கள். ஸாதாரணமாய் ஹிந்துக்கள் மனதில் அத்தீண்டா ஜாதியாரின் ஸ்திதியை உயர்த்த வேண்டுமென்ற எண்ணமானது உதித்திருக்கிற தென்றாலும், அவ்வெண்ணமானது யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிற தென்றாவது அவ்வெண்ணமானது காரியத்தில் அனுஷ்டிக்கப் பட்டுவந்துவிட்டது என்றாவது சொல்வதற் கிடமில்லை. நாம் தாமதிக்கும் பொழுது பாதிரி மார் சும்மா இருப்பார்களா? ஒரு பறையன் வீட்டுக்குள் வரக்கூடா தென்கிறோம். அவன் ஞானஸ்நானம் செய்து ஜான் என்ற பெயருடன் வருவானாகில் அவன் வீட்டுக்குள்

வருவதைத் தடுக்கக் காணோம். ஆகையால் ஒரு சிறு மாறுதலால் மரியாதையும் கிடைக்கின்றது; அதனால் படிப்பும், படிப்பினால் அதிக ஊதியமும் கிடைக்கிறது என்று கண்டால் அத்தீண்டா ஜாதியார் கிறிஸ்தவர்களாய் மாறுவது என்ன ஆச்சரியம்?

***

'வர்ணாசிரமதர்மம் தான் நமக்குப்பேருபகாரி, வர்ண பேதமில்லாவிடில் இந்தியாவில் நாம் கிறிஸ்தவர்களாக்க முடியாதென்று ரெவரண்டு ஹாலண்டு கூறிகிறார். அவர் தம் மனதுக்குச்சரியென்று தோன்றுகிறபடி தம் தர்மத்தைச்செய்கிறார். 5-வது மனிதவர்க்கத்தின் 5வது உட்பிரிவாராகிய இங்கிலீஷ் காரருடைய பிடிவாதத்துடனும் உற்சாகத்துடனும் கொண்டகாரியத்தைச் சாதிக்கின்றார். நாம் தீர்க்கஸூத்திரமாக ஆலோசனை செய்து கொண்டும் கூட்டங்களில் தீர்மானங்களை எழுதிக்கொண்டும், வழக்கத்தில் அத்தீர்மானங்களை அனுஸரியாதிருந்து கொண்டும் வருகிறோம். நாம் இப்போது தீண்டா ஜாதியாரை உயர்த்த வேண்டுமென்று நாம் செய்யும் முயற்சிகூட காலானுஸாரமாக நாம் செய்யும்படி கட்டாயப் படுத்தப்பட்டிருப்பதாலன்றி, நம்முடைய பெருந்தன்மையைக் காட்டுவதாய்க்கூற முடியாது,

***

ரெவரண்டு ஹாலண்டு அவர்கள் புஸ்தகத்தைப் படித்து நாம் அறியவேண்டியது யாது? ஹிந்துக்களாய் இதுகாறும் ருதப்பட்ட தீண்டா ஜாதியார் கிறிஸ்தவர்களாய்ப் போனால் போகட்டும் என்று நாம் இருப்பது சரியா? அப்படிப்போவது சரியில்லையென்றால் நாம் செய்யவேண்டியது என்ன? பேசவேண்டியதென்ன வென்று நமக்குத் தெரியும். கிரியாம்சையில் நாம் தீண்டா ஜாதியாரின் தீண்டாததன்மையை ஒழிக்கவேண்டியது அவசியம். குறைந்த பக்ஷம் இதையாவது செய்யாத போனால் நாம் ஒன்றும் பேசத் தகுதியற்றவர்களாவோம். பள்ளிக்கூடங்களில்

அந்த ஜாதிப் பையன்களை சேர்க்கமாட்டோம். என்று சொல்லக்கூடாது. இப்போது உழைப்பதைக் காட்டிலும் மிகத் தீவிரமாக அவர்களுக்குக் கல்வி கற்பிக்கவும், அவர்களை உயர்த்தி அவர்களுக்குக் கண்யமாய் ஜீவியம் தேட சௌகரியங்களைக் கொடுக்கவும் நாம் முயலவேண்டும்.

***

உண்மையாய் கிறிஸ்தவ மதத்தின் உண்மையை உற்றுணர்ந்த பிறகு தான் கிறிஸ்தவர்களாக்கவேண்டுமே யொழிய, காசாசை காட்டியும், உலகத்தில் கண்ணியமுண்டாகும் என்ற ஆசை காட்டியும கிறிஸ்தவர்களாக்குவது சரியல்ல வென்று நாம பாதிரிமாரைக் குறை கூறுவது யாது பயன்? ஆகையால் அவ்விதமாய் நம் காலத்தை வீணாக்காமல் எதைச் செய்தால் நம் இளைய சகோதரர்களானவர்கள், இறைவனது ஆணையால் ஹிந்துக்களாய் பிறந்தவர்கள், நம்மைவிட்டுப் பிறமதத்தில் சேரமாட்டார்களோ அதைச் செய்வோமாக.

***

சென்னை கவர்ண்மெண்டார் இந்த ஜாதியாரை உயர்த்துவதற்காக ஒரு உததியோகஸ்தரை நியமித்திருக்கிறார்கள். ஹிநதுக்கள் சங்கங்கள் கூடி அவர்களுக்கு கல்வி கற்பிக்கவும், பாது காக்கவும், முன் வந்தால் ஒழிய, கவர்ண்மெண்டு உத்யோகஸ்தரும, பாதிரிமாருடைய உதவியைத் தேடவேண்டிவரும். அப்பொழுது அதை யார் ஆக்ஷேபிக்க இடமுண்டு! ஆகையால் அவ்விதம் நேரிடாதபடி ஹிந்துக்கள் முன்வந்து உதவி செய்யவேண்டும்.

ஆர். அரங்கஸ்வாமி ஐயர்

## சாரணர் பக்கம்.

1919ஹு ஏப்பிரல் மேமாதங்களில் மதுரை இந்தியச் சாரணர் சங்கத்தின் சாரணர் சிலர் சென்று சாத்தூரில் புதிதாக சாரணர்களைப் பழக்கினார்கள். பள்ளிக் கூடங்கள் சாத்தி யிருக்கும் காலத்தில் செய்யக் கூடிய கைங்கரியத்தில் இது மிகவும் உபயோகமுள்ளது. சாத்தூரில் அவ்வாறு பழகிய சாரணர் இவ்வளவு சீக்கிர காலத்தில தம்முடைய சரியான சாரணர் தன்மையைக் காட்டி தம் ஊராருக்கு உபகாரம் செய்தனர் என்று அறிய அதிக சந்தோஷ மடைகிறோம்.

30—5—19ல் சாத்தூரில் ஒரு அம்பட்டன் வீட்டில் தீப்பிடித்ததாம். அப்பொது சாத்தூரில் உள்ள சாரணர்கள் கூடி, தீயை அமர்த்தினதாயும், எறியும் வீட்டிற்குள் சென்று அங்கிருந்த இரண்டு கிழவிகளை வெளியில் கொண்டு வந்து அவர்கள் உயிரைக் காப்பாற்றியதாயும் மதுரையில் பிரசுரமாகும் ஸவுத் இந்தியன மெயில் பத்திரிகையிலிருந்து தெரிய வருகிறது. அச்சாரணர் பிராமணரும் மற்ற மேல் ஜாதியோராகிய வேளாளர் முதலானோரும் என்பதும் அவர்கள் கூசாமல் அம்பட்டன் வீட்டின் நெருப்பை அவிக்கமுன் வந்தார்கள் என்பதும் மிகவும் கவனிக்கத் தக்கது. இதனால் நமது வாலிபர்கள் மனதில் பதியும்படி நல்ல விதையை விதைத்தால் அவ்விதை வெகு சீக்கிரத்தில் பலனை அளிக்கும் என்பது நன்கு விளங்க வில்லையா?

சாத்தூர் சாரணரே, பேஷ்! இதுதான் தேசகைங்கரியம். நன்கு செய்தீர்கள்!

# கஷ்டமும் சக்தியும்.

மகாத்மா காந்தியவர்களால் பிரதிபாதிக்கப்பட்ட ஸத்தியாக்கிரஹ விரதம் என்ற நோன்பால் அத்யாத்ம வாழ்க்கையில் ஒரு அபூர்வமானதும், கவனிக்கத் தக்கதுமான ஒரு தத்துவத்தை சாதாரண ஜனங்கள் கூட அறிய ஏதுவாகின்றது. ஸ்ரீமான் காந்தியை ஹிந்துக்கள் அவரிடம் கொண்ட அன்பாலும் பக்தியாலும் மகாத்மா என்ற அழகிய பெயரால் அழைக்கிறார்கள். ஸத்யாக்கிரஹத்தை அநேகர் ஸாத்விக எதிர்ப்பு என்று தவறுதலாகக்கொள்ளுகிறார்கள். ஆனால் ஸ்ரீமான் காந்தியவர்கள் இரண்டும் வெவ்வேறு பொருள்பட்டன என்று கூறுகிறார். அவர் சொல்வது சரியே. ஸாத்விக எதிர்ப்பு என்றால் சட்டத்தால் செய்யென்று விதிக்கப்பட்ட விதியை அனுஷ்டிக்க மறுப்பதும், செய்யாதேயென்று நிஷேதிக்கப்பட்ட காரியத்தைச் செய்வதுமான ஒரு மறுத்தலாகும். அது ஒரு சட்டமானது ஜனங்களுக்கு சம்மதமில்லாமல் இருந்தால் அந்தச் சட்டத்தை மாற்றுவதற்காக உபயோகிக்கப்படும் ஒரு ராஜீய சீர்திருத்தக் கருவியாகும். சட்டத்தால் ஒன்று விதிக்கப்படுகின்றது. நம்முடைய மனச்சாக்ஷியோ அதைச் செய்வது சரியல்லவென்று வற்புறுத்துகிறது. இவ்வாறு இரண்டிற்கும் முரண் ஏற்படும்போது, மனச்சாக்ஷியை அனுசரித்து அரசாட்சியாரின் கட்டளைக்குக் கீழ்படியாமல் இருக்கத் தீர்மானிக்கிறோம். இது ஸாத்விக எதிர்ப்பாகும். இதன் நோக்கமானது நாம் கஷ்டப்படவேண்டும் என்று உன்னியல்ல. ஆனால் சட்டத்திற்கு மாறாக நடப்பதனால் சட்டத்தால் விதிக்கப்பட்ட தண்டனையைச் சகிக்கிறோம். அப்படி சட்டத்தை மீறி நடப்பவர் ஒரு சிலரேயாயின், சட்டத்தை மாற்றும் விஷயத்தில் அவர் படும் கஷ்டத்தால் பயனிராது, ஆனால் காலம் செல்லச் செல்ல சட்டதை மீறுகிறவரின்

சங்கை அதிகரிக்க அதிகரிக்க, ஜனங்களின் அபிப்பிராயத்தின் பயனாக சட்டமானது மாற்றப்படுகிறது. அல்லது அரசாங்கத்தார் அச்சட்டத்தை உபயோகியாமல் நிறுத்திவிடுகிறார்கள். ஆகையால் சாத்விக எதிர்ப்பில் கவனிக்கவேண்டியதென்னவென்றால், ஒரு குறிப்பிட்ட விஷயத்தை உத்தேசித்துத் தான் சட்டமறுப்பானது ஆரம்பிக்கப்படுகிறது. மறுப்போர் எவ்வளவு பேரிருக்கிறார்கள் என்பதையும், ஜனங்கள் அவர்களுடைய எதிர்ப்பை ஆமோதிக்கிறார்களா என்பதையும் பொறுத்திருக்கிறது மறுப்போர் சீக்கிரம் ஜயம் பெறுவது. இது ஒரு ராஜ்ய சீர்திருத்தக்கருவி. அதன் பிரயோஜனம் ஆக்ஷேபணைக்கிடமான சட்டத்தை மாற்றுவதே. அச்சட்டத்தை மறுப்போர் பலரிருந்தாலும், குற்றம் செய்யாது சட்டத்தைக் கீழ்ப்படியாதிருத்தல் சாத்தியமாயினும் தான், இக்கருவியை உபயோகிக்க முடியும். அரசாங்கத்தார் சாத்விக எதிர்ப்பை அலக்ஷியம் செய்வதாக வைத்துக்கொள்வோம். அல்லது குற்றத்தைச் செய்யாதபோனால் சட்டத்தை மீறமுடியாதபடி அரசாங்கத்தார் சட்டத்தை அமைப்பதாக வைத்துக்கொள்வோம். அப்போது சாத்விக எதிர்ப்பு நிஷ்பிரயோஜனமாகும். ஆனால் மேற்கூறிய இரண்டு பக்ஷத்திலும் அதிகாரிகள் சட்டமறுப்பாளிகள் பேரில் சட்டப்படி நடவடிக்கைகள் நடத்தாமல் இருக்கலாம். அப்போது சட்டம் இருந்தும் இல்லாதது போல வாய்விடும்.

ஆனால் மகாத்மா காந்தியவர்கள் பிரதிபாதனம் செய்யும் ஸத்யாக்கிரஹமானது ராஜ்ய சீர்திருத்த உபகரணம் அல்ல. ஆனால் அது அத்யாத்மபரமான உபகரணம். சிற்சில சந்தர்ப்பங்களில் ஒருவன் படும் துன்பத்தையே சக்தியாய் மாற்றலாம் என்ற ஆத்மாத்மிக உண்மையின் பேரில் ஸத்யாக்கிரஹ விரதமானது ஸ்தாபிக்கப்பெற்றிருக்கிறது.

ஸ்ரீமான் காந்தியவர்கள் கூறுகிறதாவது:

"ஸத்யாக்கிரஹியானவன் அடியில் கண்ட குணங்களை கொண்டவனாயிருத்த லவசியம். யாதவரினும், எந்த சந்தர்ப்பங்களிலும், ஸத்தியத்தையே அனுசரிக்கவேண்டும். விரோதிகளை நேசிக்க ஒவ்வொரு நிமிஷமும் முயலவேண்டும். எந்த அரசாட்சியாருடைய சட்டத்தை மீறுகிறனே, அவ்வரசாட்சியாராலாவது அல்லது ஸத்யாக்கிரஹியின் கொள்கை சரியல்ல வென்று நினைப்பவர்களாலாவது என்ன கஷ்டங்கள் ஏற்படினும், அவைகளை யெல்லாம் பொறுக்கச் சித்தமாயிருக்கவேண்டும். இந்த விரதமே ஆத்மசக்தியையும் தபஸையும் தான், அஸ்திவாரமாயுடையது."

ஸத்யாக்கிரஹி ஆத்யாத்மிக வாழ்வை அனுஸரிப்பவனாயிருத்தல் வேண்டுமென்றும், ஒருவரிடமும் பகை யற்றவனாயிருப்பதுடன் விரோதிப்பவரையும் நேசிக்கிறவனாயிருக்கவேண்டுமென்றும், ஒருவரிடமும் கோபமில்லாமல் எல்லாக் கஷ்டங்களையும் பொறுக்கவேண்டுமென்றும் விளங்குகிறது ஆகையால் ஒருவன் ஸத்யத்தினின்று கொஞ்சம் பிறழ்ந்தாலும், மற்றவரைப்பற்றி அன்பு மாறிப்பேசினாலும், மற்றவரைப்பற்றி அவதூறாயும் கொடூரமாயும் பேசினாலும், அவன் ஸத்யாக்கிரஹியாகமாட்டான்; அவன் ஸத்யாகிரஹ வேஷதாரியே.

சில காலத்திற்கு முன் நிகழ்ந்த உண்மையான ஸத்யாக்கிரஹத்தைப் பற்றிச் சொல்வோம். 10,000 பேர் வேலையினின்று நின்றார்கள் அவர்கள் பசியால் வருந்தியிருந்தார்கள். முதலாளிகளோ பிடிவாதமாயிருந்தார்கள். அப்போது மகாத்மா காந்தியும், அவரின் மனைவியும், ஸ்ரீமதி அனஸூயா தாராபாயும் ஆகியமூவரும் வேலையாட்களுடைய கோரிக்கைகளுக்கு இணங்குவதாய் முதலாளிகள் சம்மதித்து வேலை நிறுத்தம் நின்றால் ஒழிய, அது பரியந்தம் தாம் ஒரு விதமான ஆகாரத்தையும் உட்கொள்ளுகிறதில்லை யென்று பிராயோபவேசம் செய்தார்கள். இப்படிச் சில நாட்கள் பிராயோபவேசம் செய்த பிறகு முதலாளிகள் இவர்கள் செய்யும் கொடுந்தபஸையும் படும் கஷ்டத்தையும் பார்த்து

வேலையாட்கள் கோரிக்கைக்கு இணங்கினர்கள். மூவரும் பட்ட கஷ்டமானது சக்தியாய் மாறி, பிடிவாதமுள்ளவர்களுடைய கல்லினும் கடினமான மனதைக் கரைத்தது ஒருவிதமான உபந்யாஸம், ஒருவிதமான கூட்டம், ஒருவிதமான கிளர்ச்சி ஒன்றும் நடக்கவில்லை. மூன்று தபோதனர் அன்பின் மிகுதியால் ஒருவிதமான படாடோபமும் கூக்குரலும் இன்றிக் கஷ்டப்பட்டார்கள். அதனால் ஜயம் பெற்றார்கள்.

இதன் தத்துவம் என்ன? அத்யாத்ம வாழ்வின் ரஹஸ்யம் என்னவென்றால்; யக்ஞமே அதாவது ஆத்மதியாகமே. ஒவ்வொருவனுக்கும் இரண்டு சுபாவம் உண்டு. கீழ் சுபாவமானது தனக்கு வேண்டும் வேண்டும் என்று கேட்கும். யக்ஞம் அல்லது தியாகமானது அக் கீழ் சுபாவத்துக்கு வருத்தத்தைத் தருகின்றது. மேலான சுபாவமோவென்றால், கொடுக்கிறேன் உதவி செய்கிறேன் என்று தியாகத்திலேயே ஆனந்தப்படும். கொடுத்தல் தான் அதன் ஜீவன். ஆகையால் அதற்கு யக்ஞம் அல்லது தியாகம் ஆனந்தகரமானது. கீழ் சுபாவத்தின் ஆனந்தத்தை பரித்தியாகம் பண்ணினால் மேல் சுபாவமானது விகாஸத்தை அடைந்து விருத்தியாகின்றது. கீழ் சுபாவத்தை வருத்தப்படுத்தினால் மேல்சுபாவத்தில் சக்திகள் வளருகின்றன. ஒவ்வொருவனுடைய ஹிருதய குஹையிலும் வஸிக்கும் ஆத்மாவானவன், சர்வ சக்தி சம்பன்னனான ஈசுவரனாயிருந்தாலும் தான் வேறு என்ற அவித்யையினால், மாயையின் சக்தியால், மூடப்பட்டு இருக்கிறான். அவனைச் சுற்றி வளைந்திருக்கும் சுவற்றில் அவனுடைய அபாரமான சக்திகள் வெளிப்படுவதற்கு வாசல்களில்லை. அந்த சக்திகளை வெளியில் செல்லும்படி செய்ய வேண்டுமானால், அந்த ஜீவன் ஸன்யாஸி ஆகி பௌதிக திரவியங்களால் ஆகிய, அவனைச் சுற்றி வளைந்திருக்கும் சுவற்றில் வாசல்களை உண்டு பண்ணுவதற்காக சுவற்றைத் தகர்க்க வேண்டியிருக்கிறது. அப்போது அதன் வழியாய் அவனுடைய சக்திகள் வெளிப்படும். சுவற்றைத் தகர்க்கும்

போது அதிக வருத்தமாகத் தானிருக்கும். ஏன் என்றால், அவற்றில் தான் சம்மந்தப்பட்டிருக்கிறான். ஆனால் அப்படிக் கஷ்டப்படாவிடில் அவன் சக்திகள் வெளிக்கிளம்ப முடியாது.

இன்னொரு விதமாய் இதைப்பார்ப்போம். அத்யாத்ம வாழ்வை யுடையவன் ஒன்றுக்கொன்று முரண்படுகிறதும் ஒற்றுமை யற்றதுமான ஸ்புரணங்களால் சூழப்பட்டவனாயிருக்கிறான். எல்லாவற்றையும் அவன் தானே கிரஹித்துக்கொண்டு அவ்வித ஸ்புரணங்களால் தாக்கப்படுகிறான். அவைகளுடைய பரஸ்பர ஸங்கர்ஷங்களால் அவனும் சிதைவுறுகிறான், அவனே சின்னபின்னப்பட்டுத் துன்புறுகிறான். ஆனால் தன் வருத்தத்தை ஜயிக்கிறான். பகையை அன்பால் மாற்றுகிறான். அவதூறை ஸத்தியத்தினால் மாற்றுகிறான். குரூரத்தை சாந்தத்தினால் மாற்றுகிறான். அவனுக்குள் சண்டையிடும் ஸ்புரணங்களுடைய தாக்குதலால் அவன் அதிகமாகத் துன்பப்பட்டாலும், அன்பு, இரக்கம், ஸத்தியம் ஆகிய உத்தமகுணங்கள் அவைகளுக்கு மாறான அவகுணங்களை ஜயித்து ஆத்மசக்தியின் பிரவாகமாக வெளிக்கிளம்புகின்றன. அவைகளுக்கு முன் நிற்கக்கூடிய தடங்கல் ஒன்றும் கிடையாது.

ஆனால் மேற்கூறியவற்றிலிருந்து விசதமாகிறது யாதெனில், ஸத்யாக்கிரஹத்தைக் கருவியாக உபயோகிக்கக் கூடியவர் மிகவும் சிலரே உலகத்தில் இருக்கமுடியும். எல்லாரும் உபயோகிக்கக்கூடிய கருவியல்ல ஸத்யாக்கிரஹம். இது யோகியின் உபகரணம். ராஜதந்திரியின் ஆயுதமல்ல. ஸத்யாக்கிரஹத்தை உபயோகிக்க அனேகர் வேண்டியதில்லை. பரமசாந்தமான பக்குவம் தான் தேவை. உண்மையான ஸத்தியாக்கிரஹிகள் மகரிஷிகள் தான். அவர்கள் உலகத்தின் கண்ணுக்குப் புலப்படாமல் ரஹஸ்யமாய் வேலை செய்து கொண்டேயிருக்கிறார்கள். ராஜாங்கத்தார்களை தங்கள் எண்ணப்படி மாற்றவேண்டும் என்று எண்ணும்போதெல்லாம் ராஜாங்கங்களை தங்கள் இஷ்டப்படி செய்யும்படி செ

ய்துகொண்டுவருகிறார்கள். எங்கேயாவது எதாவது ஒரு சமயத்தில், ஒரு உண்மையான தபஸ்வி, உண்மையான ஸன்யாஸியானவன் அவர்களுடைய கருவியாகிய ஸத்யாக்கிரஹத்தை உபயோகிக்கலாம். அப்மாதிரியாய் தான் மகாத்மா காந்தியவர்கள் அஹமதாபாத்தில் உபயோகம் செய்தார்கள்.

ஆசையால் ஸத்யாக்கிரஹத்தை அதன் இயற்கைக்கு ஏற்றபடி உபயோகிக்கும் ஒரே முறையென்னவென்றால், சில சிரத்தையுள்ளவர்கள் தபஸினால் காயத்தை சுத்தம் செய்துகொண்டு, மன இந்திரியாதிகளையும் காமக்குரோதாதிகளையும் நன்றாய் நிக்கிரஹம் செய்து கொண்டவர்களாய், உலக வியாபாரங்களினின்று விலகி நின்றவர்களாய், இருந்துகொண்டு தாத்காலிகமாய் தேச ஜாதிக்கே கேடு விளைக்கும் குறிப்பிட்ட காரணத்தை நிவர்த்திக்கவேண்டுமென்று சங்கற்பம் செய்துகொண்டு, தபஸ், தியானம் பிராயோபவேசம் இவைகளை அனுஷ்டிக்கவேண்டும். இங்ஙனம் செய்வார்களேயானால் அவர்களிடமிருந்து வெளிப்படும் தபோமகிமையானது அரசாங்கத்தாருடைய ஹிருதயத்தை மாற்றும் என்பதில் எனக்கு யாதொரு ஐயப்பாடும் இல்லை. அரசாங்கத்தாருடைய எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் மாற்றி அவர்களை இரக்கம் நேர்மையாகிய வழிகளில் நடக்கும்படி செய்யும் என்பது திண்ணம்.

அன்னி பெஸண்டு.

---

## ஆத்மார்த்தக் கல்வி அவசியம்.

9வது தொகுதி 367-ஆம் பக்கத் தொடர்ச்சி.

---

மனிதர்க்குள் பரஸ்பர சம்மந்தம்—ஒவ்வொரு சரீரத்திலிருந்தும் பல அணுக்கள் நிமிஷந்தோறும் வெளிக்கிளம்பி மற்ற சரீரங்களில் பிரவேசித்து வருகின்றனவென்று நவீன சாஸ்திரிகள் கண்டறிந்து தெரிவித்திருக்கிறார்கள். இப்படி வெளிப்படுகிற அணுக்கள் சாதாரண ஸ்தூலக் கண்களுக்குப் புலப்படுவதில்லை.

ஒருவருடைய சரீரத்திலிருந்து உதிக்கும் சப்தமானது மற்றவர்களைப் போய் சேருகிறதை நாம் அறிகிறோம். இவ் விதமாகவே மனதில் உண்டாகும் எண்ணங்களாகிய சலனங்கள் அதிக நுண்ணிய திரவியங்களால் அமைந்த மானஸீக ஆகாயத்தில் அலைகளாய்ப் போய் பிறருடைய மனதைத் தாக்குகிறது. இதைப் பற்றி பின்னால் விவரிக்கப்படும்.

இவைகளினால் ஒவ்வொருவனும் தன்னுடைய காயம், வாக்கு, மனம், இம்மூன்றினாலும் பிறரை பாதித்து வருகிறான் என்று பரிஷ்காரமாய் துலங்குகிறது. இவனுடைய செய்கைகளுக்குத் தக்கவாறு பிறருக்கு சுகம் அல்லது துக்கம் உண்டாகிறது. ஜீவராசிகளெல்லாம் ஒரு சங்கிலியில் கோக்கப்பட்ட வளையங்கள் போலிருப்பதால் ஒருவருக்குண்டாகும் சுக துக்கங்கள் மற்றவர்களை அவர்கள் அறியாமலே தாக்குகின்றன என்று நன்கு துலங்குகிறது.

9. பிரகிருதத்தில் ஐரோப்பாவில் சில குறிப்பிட்ட தேசத்தார்களுக்குள் முதலில் நேரிட்ட சண்டை மேற்படி கண்டத்தின் பல தேசங்களும் ஆப்பிரிக்கா, ஆசியா, அமெரிக்கா இக்கண்டங்களில் உள்ள பல தேசங்களுக்கும் பரவி சண்டையில் யாதொரு விதத்திலும் சம்பந்தப்படாத தேசத்தார்களையும் கைத்தொழில் வியாபாரம் முதலிய விஷய

ங்களில் பாதித்து வருவதைப் பார்க்கிறோம். இவ்விதம் ஸ்தூல உலகில நிகழுமானல் ஸூக்ஷ்ம உலகத்திலும் நிக ழக்கூடாதென்று நாம் ஏன் சந்தேகிக்கவேண்டும்? ஒருவனு க்குத் தொத்து வியாதி கண்டால் மற்றவர்களுக்கு அந்த வியாதி அணுகாமல் இருக்கும்பொருட்டு வேண்டிய ஏற் பாடுகள் செய்கிறார்கள். மனதினல் பிறநுக்கு உண்டாகும் கஷ்டங்களோ சௌகரியங்களோ ஸூக்ஷ்ம லோகங்களில் புலப்படும். அதை சாதாரண ஜனங்கள் அறிகிறதில்லை, தீர் க்கதரிசிகள் அறிகிறார்கள. இவர்கள உலகத்தின க்ஷேமத் தின் பொருட்டு ஸூக்ஷ்ம உலகங்களில் சதா கைங்கர்யம் செய்து வருகிறார்கள். அவர்கள் அனுக்கிரகம் பெற்ற வர்கள். பிறர் நன்மையைக் கோரி தங்களுக்கு நேரும் சங் கடங்களைக் கவனியாமல் ஸதா உழைத்து வருகிறார்கள். இந்த விஷயங்களை மாணவர்களும், மாணவிகளும நன் ருய் உணரும்படி செய்யவேண்டும். இந்த பரோபகார கைங்கர்யமானது குடும்பத்தில ஆரம்பமாய், கல்விகற்கும் பாடசாலை, தன் கிராமம் தன் மாகாணம், தேசம், முதலி யவைகளுக்குப் பரவவேண்டும் என்ற விஷயமும் கற்பிக்கத் தக்கதே.

10. மனதைப்பற்றி ஒரு பெரியவர் அடியில்கண்ட வாறு கூறியுள்ளார்.—

"மனமது செம்மையானல் மந்திரம் செபிக்கவேண்டாம்
மனமது செம்மையானல் வாயுவை உயர்த்தவேண்டாம்
மனமது செம்மையானல் வாசியை நிறுத்தவேண்டாம்
மனமது செம்மையானல் மந்திரம் செம்மை யாமே"

மனதுக்கு இவ்வளவு விசேஷம் வரக்காரணமென்ன என்று விசாரிப்போம்.

முதலில் இப்பிரபஞ்சமே மனச்சங்கற்பத்தால் ஏற் பட்டுள்ளது. இக்கருத்தை கைவல்லியநூலாசிரியர் "மன த்தினு லெண்ணித்தானே வந்ததிவ் வுலகமாகும்" என்ற

பாசுரத்தில் விளக்கியிருக்கிறார். மனிதன் ஈசுவர அம்சமாகையால் மனிதன் சங்கற்பத்தை பலவித சிருஷ்டி, ஸ்திதி, லயங்களுக்கு உபயோக்ப்படுத்தலாம் என்பதில் சந்தேகமில்லை.

நம்முடைய கண் முதலிய வெள்ளிப்படையான இந்திரியங்கள் மனதுடன் சம்மந்தப்படாதவரை நாம் பார்த்தல் கேட்டல், முகர்தல், ஸ்பரிசித்தல், ருசி அறிதல் முதலிய காரியங்களைச் செய்ய வொண்ணாது என்பது எல்லோரும் அறிந்த விஷடமே. கை கால் முதலிய கர்மேந்திரியங்களும் அவைகளின் காரியங்களைச் செய்யாது. ஆகையால் எக்காரியத்திற்கும் மனமே காரணமாகின்றது.

11. இதனல் ஒவ்வொருவரும் மனதைச் சரியானபடி வைத்துக்கொள்ளவேண்டியது அவசியமென்று விளங்குகிறது. மனதைச் சரிப்படுத்துகிறதெப்படி என்று ஆலோசிப்போம். நம்முடைய ஸ்தூல சரீரத்தை வியாதியின்றி வைத்துக் கொள்ளுவதற்கு எவ்விதம் சுத்த ஆகாரம், சுத்தக் காற்று, தேகப்பயிற்சி முதலிய அவசியமோ, அவ்விதம் மனச் சுகத்திற்கும் நல்ல சங்கற்பங்கள் அதாவது எண்ணங்கள், நல்ல சிந்தனைகளை ஸ்மரித்தல், மனதை ஒருமைப் படுத்தி குரு, ஈசுவரன் இவர்களிடம் செலுத்தல், கெட்ட எண்ணங்களைத் தவிர்த்தல் முதலியன அவசியமாகும். நல்ல விஷயங்களைப் பற்றியும் அவரவர் மனதுக்குப் பிரியமான மூர்த்தியைப் பற்றியும், வைராக்கியத்துடன ஸ்மரிப்பதனுல் மனதில் கெட்ட எண்ணங்கள் உண்டாகாமல கூாளடைவில் செய்துவிடலாம். இவைகள் தான் மனதை அடக்கும் கடிவாளம் எனலாம். காமக்குரோத லோப மோக மத மாச்சர்யம் முதலிய அவகுணங்களை அணுக வொட்டாமல் செய்யவேண்டுமானுல் அவைகளுக் கெதிரிடைக குணங்களான அன்பு, பரோபகாரம், சகோதரபாவம், ராஜ பக்தி, தெய்வ பக்தி, பெரியோர்கள் பக்தி, பொய்யாமை முதலிய சுப குணங்களை கைக்கொள்

ளும்படி செய்யவேண்டும். இதுதான் கல்வியின் நோக்கம். அஃதாவது மாணக்கர்கள், மாணவிகள் இவர்களுடைய நடத்தையைச் சீர்படுத்துவதுதான். இதை உணர்ந்து தினசரி வாழ்க்கையில் நடக்கும்படியாக மாணுக்கர்களையும் மாணவிகளையும் செய்வது உபாத்தியாயர் கடமையாம். தினசரி காலையில் ஓர் நற்குணத்தைச் சிந்தித்து அந்த குணத்தை அன்றைய தினம் அனுஷ்டித்துவர முயற்சித்தால் நாளடைவில் நற்குணமே மேலிட்டு அவகுணங்கள் மனதைவிட்டு விலகிவிடும் என்பதில் சந்தேகமில்லை. இவ்விதம் கற்பித்தும் அனுஷ்டித்தும் காட்டக்கூடிய உபாத்தியாயர்களைத் தகுந்த சம்பளத்தின் பேரில் நியமிக்கவேண்டியது ராஜாங்கத்தாருடையவும் வித்யாசாலைகளை ஏற்படுத்திக் கல்வி தானம் செய்ய விரும்புகிறவர்களுடையவும் கடமையாம். எல்லா விருத்திகளிலும் கல்வி கற்பிக்கும் விருத்தியே சிரேஷ்டமானது. இப்பொழுது சிறுவர்களாய் இருப்பவர்கள் தான் பின்னால் ராஜாங்கத்தாருக்கும், தேசத்தில் வசிக்கும் ஜனங்களுக்கும் உழைக்கவேண்டியவர்கள். அவர்களை அவ்வித கைங்கர்யத்திற்குத் தக்கவர்களாகச் செய்யவேண்டிய பொறுப்பை வஹித்து அவர்கள் நடத்தையை இப்பொழுது நலவழிபடுத்திவிட்டால், பின்னிட்டு ராஜாங்கத்தாருக்கு ராஜ்ய விஷயத்தில் ஜனங்களால் எவ்வித உபத்திரவமும் இல்லாமல் ஜனங்களுக்குள் திருப்தியும் ராஜ பக்தியும் ஏற்படும் என்பது என்னுடைய தீவிரமான அபிப்பிராயம். வம்பு வழக்குகள் குறைபடும் என்பதிலும், களவு முதலிய குற்றச் செய்கைகள் விருத்தி ஆகாமல் க்ஷீணதசையை அடையுமென்பதிலும் சந்தேகமில்லை. இப்பொழுது ஜனங்களின் வழக்குகளைத் தீர்ப்பதற்கும் குற்றங்களைத் தடுப்பதற்கும் நியமிக்கப்பட்டிருக்கிற நியாயஸ்தலங்கள் போலீஸ் சேனை முதலியவைகளைக் குறைத்துவிடலாம். அதற்காகச் செலவாகும் தொகையும் குறைவுபடலாம்.

12. மனத்தினிடமிருந்து உண்டாகும் சலனங்களான எண்ணங்களுக்கு ரூபமும் வர்ணமும் ஏற்பட்டிருப்பதாக ஸூக்ஷ்மதிருஷ்டி உள்ளவர்கள் கண்டறிந்திருப்பதை பவிஷ்ய புராணத்தில் விபரமாய்த் துலக்கப்பட்டிருக்கிறது. தற்காலத்தில் "எண்ணங்களின் ரூபங்கள்" என்ற பெயருடன் ஸ்ரீமதி அன்னி பெஸண்டம்மையும் ஸ்ரீமான் லெட்பீட்டரும் எழுதியிருக்கிற புஸ்தகத்தில் விபரிக்கப்பட்டிருக்கிறது.

13 மனச்சலமானது எவ்விதம் பிறரைப்போய் அடைகிறதென்பதைச் சில உலக திருஷ்டாந்தத்தால் அடியில் பார்போம்.

காற்றினால் பாதிக்கப்படாத ஒரு குளத்தின் ஜலத்தில் ஒரு கல்லை எறிந்தால் கல் விழுந்த இடம் முதல் அலைகள் வட்ட வட்டமாகக் கிளம்பி கரை வரை சென்று திரும்பி விழுந்த இடத்திற்கு வந்துசேர்ந்து ஓய்வை அடைகின்றன. கரை மண்கரையாய் இருந்தால் மண்ணையும் கரைத்துக் கொண்டு திரும்புகிறது. கரை பாரையாக இருந்தால் கரைக்கச் சக்தியற்றுப் போய்விடுகிறது. இவ்விதமே ஒருவன் கொள்ளும் எண்ணங்கள் மானஸீக ஆகாயத்தில் அலைகளாகக் கிளம்பி பிறர் மனதைத் தாக்குகின்றன. அப்படித் தாக்கப்படும் மனமானது சுத்தமானதாகவும் ஸ்திரமான ஸ்வபாவமுடையதாகவும் இருந்தால் சலிக்கச் செய்ய சக்தியற்று எண்ணங்கள் திரும்பி விடுகின்றன.

சஞ்சலமுள்ள மனதைத் தாக்கினால் அங்கே சஞ்சலத்தை அதிகப்படுத்திவிட்டு அவ்விடத்திலுள்ள சலனங்களையும் இழுத்துக்கொண்டு உற்பத்தியான இடத்தில் வந்து சேருகின்றன. ஒருவன் கோப எண்ணத்தை அனுப்பினால் பிறர்களையும் தாக்கி கோப சலனத்தை உண்டாக்கிவிட்டு திரும்ப இவனிடம் வந்து கோபத்தை அதிகரிக்கச் செய்கிறது. இவ்விதமே மற்ற எண்ணங்கள் விஷயத்திலும் கண்டுகொள்க.

அக்னியானது எரியும் இடத்திற்கு அப்பால் உள்ள பதார்த்தங்களைத் தன் வெக்கையால் தாக்கி மேற்படி பதார்த்தங்களில் தளர்ச்சி உண்டாக்குவதைக் காண்கிறோம். தந்திக்கம்பி இல்லாமல் சமாசாரங்கள் ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு அனுப்பப்பட்டு வருவதாகக் காண்கிறோம். இவ்விதமே மனச் சலனங்களும் செல்லுகின்றனவெனத் தெரிந்துகொள்க. மனதை ஊசிக் காந்தம் போல இழுக்கும் சக்தி மனதுக்கு உண்டு என்று ஒரு பெரியவர் சொல்லுகிறார். ஒவ்வொருவனும் தான் சாதாரணமாய்க் கொள்ளும் எண்ணங்களுக்கு ஒத்த பிறருடைய எண்ணங்களை இழுக்கிறான்.

14. மனித சரீரம் எவ்விதம் அமைக்கப் பெற்றுள்ளதென்பதைப்பற்றி சற்று விசாரிப்போம்.

அண்டத்திலுள்ள பல லோகங்கள் எவ்வாறு பலவித பிரகிருதி பேதங்களால் அமைக்கப்பட்டிருக்கின்றனவோ, அதுபோலவே பிண்டத்திலுள்ள பல கோசங்களும் பலவித பிரகிருதி பேதங்களால் அமைக்கப்பட்டிருக்கின்றன. அண்டத்திற்கும் பிண்டத்திற்கும் அன்யோன்ய சம்பந்தம் உண்டு. இந்த விபரங்களை அடியில்கண்ட அட்டவணை காட்டுகிறது.

மனிதன் மரணம் அடைகையில் அவனுடைய அன்னமயகோசம் பிராணமயகோசம் இவ்விரண்டும் இந்த பூலோகத்தில் அழிவை அடைகின்றன. மனிதன் மரணமடைகிறான் என்றால் சரீரத்தைக் குறிக்கிறது. எதார்த்தமான மனிதன், ஆத்மா, அழிவற்றவன். அவன் அன்னமயகோசம் பிராணமயகோசம் இவைகளைவிட்டு மனோமய கோசத்துடன் புவர் லோகம், ஸ்வர்லோகம் செல்கிறான்.

ஆகையால் ஸ்தூல உலகத்தில் மனிதன் இருக்கையில், அவன் நினைக்கும் நினைவுகள் புவர், ஸ்வர் லோகங்களில்

நிகழ்வதுபோல் இறந்தபிற்பாடும் மனதானது மேற்படி உலகங்களில் வேலைசெய்கிறது. சாதாரணமாய் மனிதர்கள் நினைக்கிறபடி இறந்தவர்களுக்கும் பூமியில் உயிருடன் இருப்பவர்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லுவதற்கு இடமில்லை. இவ்விஷயங்களைப்பற்றி விஸ்தாரமாக ஸர் ஆலிவர் லாட்ஜ் எழுதிய 'ரேமண்டு' மையர்ஸ் எழுதிய 'ஹ்யூமன் பர்ஸனலிடி', என்ற ஆங்கில கிரந்தங்கள் மூலமாய்த்தெரிந்து கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| ஆகாச தத்வம் | சத்ய லோகம் | |
| வாயு தத்வம் | தபோ லோகம் | ஆனந்தமய கோசம் |
| | ஜன லோகம் | |
| அக்னி தத்வம் | மஹர் லோகம் | விஜ்ஞானமய கோசம் |
| | ஸுவர் லோகம் | மனோமய கோசம் |
| ஜல தத்வம் | புவர் லோகம் | |
| பிருதிவி தத்வம் | பூ லோகம் | பிராணமய கோசம<br>அன்னமய கோசம் |

மேலேகண்ட ஏழு உலகங்களும் ஒன்றுக்குள் ஒன்று அடங்கி இருக்கின்றன. அதாவது வெங்காயத்தின் தோல்போல் ஒன்றுக்குள் ஒன்று அடங்கி இருக்கின்றன. அதே விதமாக கோசங்களும் ஒன்றுக்குள் ஒன்று அடங்கி இருக்கின்றன. சூக்ஷ்ம உலகங்களும் ஸ்தூல உலகத்தி லூடுருவி இருக்கின்றன. அவ்விதமே கோசங்களும்.

15. ஒருவன் செய்யும் எக்காரியத்தையும் பல அபேக்ஷையின்றி ஈசுவர கைங்கர்யமாய்ச் செய்து வருவானா னில் ஈசுவரன் அனுக்கிரகம் பெற்று இம்மையிலும் மறுமை

யிலும் சுக மடையலாம் என்ற விஷயம் கவனிக்கத்தக்கது. பரோபகாரமாய்ச் செய்யும் எக்காரியமும் ஈசுவர தைங்கர்ய மென்றே கொள்ளலாம். ஒவ்வொருவனுக்கும் தான் செய்யும் செய்கைக்குப் பலன் வந்தேதீரும். சுயநலத்தைக் கோரி ஒரு காரியம் செய்வதைப்பார்க்கிலும் பரோபகாரச் சிந்தையுடன் செய்தால் பலன் கிடைக்கிறதுமன்றி சித்த சுத்தியாய் ஞானம் பெறுதற்கு இடமாய் இருக்கிறது. பரோபகாரச் சிந்தையுடன் இப்பொழுது இந்தியாவில் வேலைசெய்து வரும் மகாத்மா காந்தி என்ன, லோகமான்ய திலகர் என்ன, ஸ்ரீமதி அன்னிபெஸண்டு அம்மையார் என்ன, காலஞ்சென்ற கோபாலகிருஷ்ண கோகலே என்ன, இவர்களைப்போலொத்த உத்தமர்களின் சரித்திரத்தை மாணுக்கர்களுக்கும் மாணவிகளுக்கும் அடிக்கடி எடுத்துரைத்து நல்ல நகரவாசிகளாக மேற்படியார்களைச் செய்வதுதான் கல்வியின் பிரயோஜனமாகும். எவன் எத்தொழிலை வகித்தாலும் அதை ஈசுவரிய தைங்கர்யம் என்று செய்து வருவானுகில் சன்மார்க்கத்தைத் தவறி நடக்க ஏதுவிராது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

16. ஒவ்வொரு மாணுக்கரும் மாணவியும் எந்த மதத்தில் பிறந்தனரோ அந்த மதத்தின் கொள்கைகளை நன்றாய்ப் படித்தல் அவசியமென்பதும் ஒருவன் தன் மதத்தை சரியாக அறிந்துகொண்டால் பிறர் மதத்தை தூஷிக்கக் காரணமிராதென்றும் விபரமாய் மாட்சிமை தங்கிய லார்ட் ஹார்டிங் பிரபு காசியில் ஹிந்து சர்வகலாசாலை கட்டடத்தின் மூலசிலா பிவேசனம் செய்த காலத்தில் தெரிவித்திருக்கிறார். இதை எல்லாப்பாடசாலைகளிலும் கவனித்து அனுஷ்டித்து வரும்படியாகக் கடவுள் அருள்புரிவாராக.

ஓம் தத் ஸத்.

கே. எஸ். இராமசந்திரையர்

## பெற்றோருபாத்திமார் சங்கம்.

தங்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் மாணாக்கர்களை அடக்கியாளுவதற்காகப் பள்ளிக்கூட வாத்திமார்கள் எவ்வளவு கெடுதலும் கொடூரமுமான பழக்கங்களை அனுஸரித்து வருகிறார்கள் என்பதை இந்தியாவிலுள்ள பெற்றோரும் உபாத்திமாரும் வெகு நாளாயறிவார்கள். அவர்கள் அனுஷ்டிக்கும் சிக்ஷா விதிகளில் சில மிகவும் குரூரமானவை. நேரில் பார்த்தால் ஒழிய இவ்வளவு குரூரமானவையாயிருக்குமா என்று நம்புவது கூட சிரமமாகும். இவ்வளவு குரூரமான தண்டனைகளைப் பற்றி பெற்றோர்கள் ஆக்ஷேபிப்பதும் வெகு அரிதாயிருக்கிறது. பெரும்பான்மையாய் பெற்றோரில பலர் இவ்வித அடக்கு முறைகள் சரியானவையென்று ஆமோதிக்கிறவர்களாயிருக்கிறார்கள். குழந்தைகளை வீட்டிலும் அம்மாதிரியே சிக்ஷித்து வருகிறார்கள்.

குழந்தைகளை குரூரமாய் சிக்ஷித்தல் முறையென்று எண்ணும் காலம் போய்க்கொண்டுவருகிறது. இக்கொடூர அடக்கு முறைகளின்றி கல்வி கற்பிக்கும் புதிய போதனா முறைகள் இருக்கின்றன. அம்முறைகளை அனுசரித்தால் குழந்தைகளை தன்னடக்கம், தைரியம், கண்ணியதை, பவ்யம், முதலிய சீர்மையான குணங்களோடு கூடியவர்களாய் ஆக்கமுடியும். குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கும் சரியான முறை தெரியாததினால் தான் உபாத்திமார் அவர்களை அடக்கியாளுகிறதாகச் சொல்லி அவர்களை மிருகங்களாக்கும் பழக்கங்களை அப்பியஸிக்கிறார்கள்,

பெற்றோர் உபாத்திமாரின் சங்க ஸ்தாபகர்கள் கொண்டிருக்கிற தீர்மானமென்னவென்றால், வீட்டிலாயினும் சரி, பள்ளியிலாயினும் சரி, எங்குதேக சிக்ஷை செய்யப்பட்டாலும், அதை சரியல்லவென்று வற்புறுத்தி ஆக்ஷேபிக்க வேண்டும் என்பது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இந்தி

யாவிலும் ஆராய்ச்சி செய்து அனுபவத்தில் பார்க்கப்பட்ட புதிய முறைகளைப்பற்றித் துண்டுப்பத்திரிகைகள் துண்டுப் புஸ்தகங்கள் பிரசுரம் செய்து, அவைகள் மூலம் பெற்றோர் உபாத்திமாருக்கு அப்புதிய முறைகளைத் தெரிவிக்க வேண்டும் என்றும் அவர்கள் கருதுகிறார்கள். இப்போது கூட பிராஹ்மஞான வித்யா பீடத்தார் ஆளுகைக்குட்பட்டிருந்து இப்போது தேசவித்யா அபிவிருத்தி சபையின் ஆளுகைக்குட்பட்ட காசி, கான்பூர், மதனப்பள்ளி முதலிய ஊர்களில் ஸ்தாபிக்கபபட்ட பள்ளிக்கூடங்களில் தேகசிக்ஷையை முற்றிலும் விலக்கியிருந்த போதிலும் மாணாக்கர்கள் நல்ல கட்டுப்பாட்டுக்குட் பட்டவர்களாயிருக்கிறார்கள். கொழும்பில் ஸ்தாபிக்கப்பட்ட ஆனந்தா காலேஜில் அமெரிக்கா தேசத்தவரான ஸ்ரீமான் குன்ஸ் அவர்கள் தலைமை உபாத்தியாயராய் வந்த பிறகு ஒரு விதமான தேக சிக்ஷையும் அனுஸரிக்காத போனாலும், மாணாக்கர்கள் முன்னைவிட நன்றாக கட்டுப்பட்டவர்களாக இருக்கிறார்கள். சில உபாத்தியார்கள் சாதித்திருப்பதை பலரும் சாதிக்க முடியும் அல்லவா? தற்கால போதனாமுறையில் மிருகத்தன்மையாக்கக்கூடிய தேக சிக்ஷையானது கொஞ்சமும் அவசியமில்லையென்று நாம் துணிவாய்ச் சொல்லலாம்.

ஸி. ஜினராஜதாஸர்.

---

முக்கிய அறிவிப்பு—யார் ஒருவர் புதிய சந்தாதார்கள் ஆறு பேர்களைச் சேர்த்து ஆர்டரில் தாமும் கையெழுத்துச் செய்தனுப்புகிறார்களோ அவர்களுக்கு அவ்வாறு சந்தாதார்களின் சந்தா வசூலான உடன் தபாற் செலவு உள்பட ரூ 2 பெருமான புத்தகங்களைப் பரிசாய் அனுப்பபபடும்.

# பெற்ஞோர் உபாத்திமார் சங்கம்.

## 1918 ஆம் வருஷ அறிக்கை.

---

பெற்ஞோர் உபாத்திமார் சங்கம் துவங்கி மூன்றும் வருஷமாகிய 1918-ஆம்வருஷத்திய அறிக்கையைப படிக்க மிகவும சந்தோஷம் அடைந்தோம். குழந்தைகளை வளர்ப்பதில் கண்டனமுறையையும் தேக சிக்ஷையையும் விலக்கி அன்பாலே அவர்களது புத்தியையும், குணத்தையும், பிரேமையையும், அழகை அறியும சக்தியையும, விவேகத்தையும் வளர்ப்பதே இச்சங்கததின் நோக்கமாகும். மேற்கூறிய நோக்கமானது நிறைவேறவேண்டுமானல், இந்தியா முழுவதும், இத்தத்துவத்தை அறிந்த உபந்யாஸகர்கள் சென்று உபந்யாஸங்கள் செய்யவேண்டும். ஆங்கிலத்திலும், தேசபாஷைகளிலும, துண்டுப்பத்திரிகைகளைப் பரவச் செய்யவேண்டும. பள்ளிக்கூடங்களிலிருக்கும் தலைமை உபாத்திமாரும மற்ற உபாத்திமாரும, மேற்கூறிய உண்மைகளை உற்றுணர்ந்து கண்டன முறையைக் கையாளாது அன்பு முறையைக் கையாண்டு அதிக அபிவிருத்தியைக் காட்டவேண்டும். தினப்பத்திரிகைகளில் இவ்வன்பு முறையின் மேன்மையைப்பற்றி அடிக்கடி எழுதவேண்டும். ஆங்காங்கு சபைகள் கூட்டி சர்ச்சைகள் வைதது இம்முறையின மேன்மையை வெளிப்படுத்தவேண்டும்.

இந்தியாவின் பற்பல பாகங்களில் உபந்யாஸங்கள் செய்யப்பட்டனவென்றும் பாதாந்தரப் பததிரிகைகளிலும் நியூ இந்தியா முதலிய தினப்பத்திரிகைகளிலும் இவ்விஷய மாயவியாஸங்கள வெளி வந்ததாயும், ஹிந்தி, கூர்ஜர பாஷை, வங்கபாஷைகளில் மொழி பெயர்ப்புகள வெளிவந்திருப்பதாயும, தெரியவருகிறது. தமிழிலும் மொழி பெயர்ப்புகளை வெளியிடப் பிரயத்தினம் செய்வார்கள என்று நம்புகிறோம். தமிழ்நாட்டில் குழந்தைகளைக் கைகொண்டும் பிரம்புகொண்டும, அடிப்பது என்ற துர்வழக்கம் இன்னும் எதேஷ்டமாய் நடக்கிறது என்பதை நாம் நன்கு அறிவோம. ஆகையால தமிழர்கள் பொருளுதவிசெய்து தமிழ்ப் பதிப்புகள சீக்கிரம வெளிவரும்படி செய்வார்களாக. மேலும ஆங்காங்கு கிளைச்சபைகளை ஏற்படுத்தி இச்சபையாரின் தத்துவங்களை நாடெங்கும பரவும்படி செய்யவேண்டியது அவசியமாகிறது.

ஓம்.

## ஸ்திரீகள்.

---

நாம் ஹிந்து புராதன கிரந்தங்களைப் படிக்கும்பொழுதும், இத்தேசத்தின ஸ்திரீகளைப் பற்றிப் பிறர் சொல்வதைக் கேட்கும்பொழுதும், இன்னும் இந்த தேசத்தில், எல்லாக்குடும்ப விஷயங்களிலும் ஒரு தாய் அல்லது பாட்டியாருக்கு முழு அதிகாரம் இருப்பதைக் கவனிக்கும் பொழுதும், ஸ்திரீகள், சம்பந்தப்பட்ட மட்டிலாவது, இந்தியர்களின் வாழ்நாளில், சகோதர பாவத்திற்கு விரோதமான கொடுமைகள் இல்லையென்று நமக்குத் தோன்றும். என்றாலும், அக்கொடுமைகள் முற்றிலும் இல்லாமற்போகவில்லை. அவைகளைத் தொலைக்கவேண்டுவதே, பிரஹ்ம ஞான சங்க அங்கத்தினர் கடமையாம். எல்லா ஆன்மாக்களிடத்திலும், ஈசன் விளங்குகிறான் என்பதையும் ஒரு ஆன்மா, ஆணாகப் பிறந்ததினாலே மிகுந்த அபிவிருத்தியுடையவன் என்றும் பெண்ணாகப் பிறந்ததினால் குறைந்த அபிவிருத்தி யுடையவன் என்றும் கூற முடியாதென்பதையும் நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். பிரஹ்ம வித்யா சாஸ்திரத்தின் பிரகாரம், ஆன்மாக்கள் ஆண், பெண் என்ற இருவித சரீரங்களிலும் வசித்து அடையும் அனுபோகங்களினாலே அபிவிருத்தி அடைகின்றனர் என்ற ஜீவ விகாச முறையையும், ஒரு ஆன்மா ஒரு தொடர்ச்சியாய் ஏழு ஜன்மங்களுக்கு மேற்படாமலும், மூன்று ஜன்மங்களுக்குக் குறையாமலும், ஒருவித சரீரத்தில் வசித்துப் பிறகு, மற்றொரு வித சரீரத்தை அடைகிறதென்றும், நமக்குத் தெரியும். உலகத்தில், ஜனங்கள் ஜீவித்திருக்கையில், அவர்களுக்கு ஏற்பட்ட ஜாதி, மதம், வர்ணம் முதலிய இத்தகைய வித்தியாசங்களைப்போலவே, ஆண் பெண் என்ற வித்தியாசமும் ஏற்பட்டிருக்கிறதென்று, பிரஹ்மவித்யா சாஸ்திரம் பயிலுபவருக்குத் தெரியும். பால் எவ்வாறாயினும், ஸ்திரீ புமான்களா

கிய எவரும், ஈசுவர சைதன்யத்தில் ஒன்ருனவர்களே. எல்லோரும் ஈசுவரனுடைய உத்தேசத்தை நிறைவேற்றுவதில் சமமாகவே உதவி புரிகிருர்கள்.

இத்தகைய வித்தியாசங்கள், ஆன்மாக்கள் அனுபவங்களை அடையும் காரியத்தில், பிரயோஜனம் உள்ளவைகள்தான். எந்த அனுபவத்தின் காரணமாக ஒரு ஆன்மா மற்ருெரு ஆன்மாவைச்சரிவர உணர்ந்துகௌரவிக்கவில்லையோ, அத்தகைய அனுபவம் பயனற்றது. ஜன சமூகத்தில் எந்த வர்க்கத்தினராவது, ஒரு ஆன்மாவின் நிஜ ஸ்வரூபத்தையும், யோக்கியதையையும் குறைவாகக் கருதுகின்றனரோ அவர்கள், சகோதர பாவத்திற்குக் கொடுமை புரிபவர்கள் ஆகிருர்கள். நமது நாகரீகத்தில் ஸ்திரீயை எவ்வகையிலாயினும், புருஷனைக் காட்டிலும், குறைந்த சாமர்த்தியம் உடையவள் என்று கருதுவது மிகவும் விசனிக்கத்தக்கது. சில காலங்களிலும், சில தேசங்களிலும், மட்டும் இத்தகைய கோணலான அபிப்பிராயம் இல்லாதிருக்கிறது; என்ருலும் அநேகமாக சகோதர பாவத்திற்கு விரோதமான இக்கொடுமை எல்லா நாகரீகத்திலும் ஏற்பட்டுள்ளது.

"ஒன்றே தெய்வம்" என்ற அபிப்பிராயம் கொண்ட இந்த இந்தியா தேசத்தில், ஸ்திரீ சரீரத்தில் வசிக்கும் ஆன்மாக்கள், அபிவிருத்தி அடைவதில், ஒரு விதத்திலாவது, அதற்குத் தடங்கல் ஏற்படாதென்று எவரேனும் நினைக்கக்கூடும். இன்னும், சரீரத்தைப் பற்றினமட்டில், வித்தியாசங்கள் ஏற்பட்டிருப்பதைத் தவிர ஸ்திரீகள், இகபர காரியங்கள் எல்லாவற்றையும் இயற்ற சக்தி உடையவர்களென்று இந்தியாவில் எல்லோரும் ஒப்புக்கொள்வதாக நினைத்தல் கூடும். ஆனல் பெரும்பான்மையாக, முன் கூறினபடி தாய் அல்லது பாட்டியின் அதிகாரத்துக்குக் குறைவில்லையென்ருலும் மற்ற விஷயங்களில் முன்சொன்னதற்கு நேர்விரோதமாகவே நடந்து வருகின்றது. சாஸ்திரத்தில் கூறின பிரகாரம் சூத்திரனுகப் பிறந்தவன் புத்தியில் சாமான்யு

ளுகவும், ஆன்ம அபிவிருத்தியில், குறைவுபட்டவனுகவும், இருந்தும் அவன் தன்னுடைய தர்மங்களை சரிவர அனுஷ்டித்து வந்தால், ஜீவவிகாசத்தில் மேல்படியாகிய வைசியனுகி பின்னர் க்ஷத்திரியனுகி, கடைசியில் ப்ராஹ்மணனுகிருன், என்று நாம் எல்லோரும் அறிவோம். ஸ்திரீகளையும், அதாவது எல்லா ஸ்திரீகளையும், ஒரே மூர்சாய், சூத்திரர்களுக்குச் சமானமாகக் கூறுவதை நாம் அறிவோம். "ஸ்திரீ சூத்திராள்" என்ற பதத்தை கிரந்தங்களில் மிகவும் உத்கிருஷ்டமான பதங்களாகப் பிரயோகப்படுத்துகிறுர்கள். இவ்விதம் செய்வது, சகோதர பாவத்திற்கு விரோதமான கொடுமை என்பது நமக்கு நன்ருய்ப் புலப்படும்.

(தொடரும்)

மிஸ். கே. ப்ரௌனிங்

மொழி பெயர்ப்பாசிரியர் பெயர் எமக்கு அனுப்பவில்லை. ப-ர்.

---

## பத்திரிகை விமர்சம்.

---

ஸிலோன் எகானமிஸ்டு Iவது தொகுதி 2, 3 பகுதிகளைப் பார்வையிட்டோம். முதல் சஞ்சிகையைவிட இவ்விரு சஞ்சிகைகளிலும் உபயோகமுள்ள குறிப்புகளும், வியாஸங்களும் அடங்கி யிருப்பதைப்பார்த்தால் இந்தப் பத்திரிகையானது கொண்ட கருத்தை நன்கு நிறைவேற்றும் என்பதில் கொஞ்சமும் நமக்கு ஐயப்பாடில்லை. 3வது பகுதியில் கண்ணுடி செய்தல், கோழி முதலிய வளர்த்தல், பாய் பின்னல் முதலிய விஷயங்களைப்பற்றி மிகவும் உபயோகமுள்ள கட்டுரைகள் வெளி வந்துள்ளன. 2வது பகுதியில் தேங்காயை எப்படி பயனுள்ளதாக்குவது என்றதையும் ஜிப்ஸம் என்ற ஓர் வகை திரவியத்தால் பொம்மைகள் செய்தல் என்ற இரண்டு வியாஸங்களும் வெளிவந்துள்ளன. இந்தப் பத்திரிக்கையானது இந்தியாவிலும் ஸிலோனிலும் வாலிபர்கள் கையில் அகப்படவேண்டும் என்றும், அவ்வாலிபர்கள் அப்பத்திரிகைகளில் கண்ட சில கைத்தொழில்களையாவது செய்யமுயல்வார்கள் என்றும் நம்புகிறேம்.

கற்பகம் 6வது தொகுதி 4வது பகுதி. புதுவையில் பிரசுரமாகும் இப்பத்திரிகையின் மேற்கண்ட பகுதியைப் பெற்றோம். பரோபகாரம், நன்றியறிதல், சினம், மாதர் இலக்கணம் என்ற பல சிறந்த வியாஸங்கள் வெளிவந்துள்ளன. இன்பமும் துன்பமும் தான் தர வருமோ என்ற வியாஸத்தில் சம்சார இன்பத்தை இகழும் இடத்தில் ஸ்திரீகளை மிகவும் கெட்டவர் என்றும் புருஷனை ஏமாற்றி மோசம் செய்கிறார்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஏமாற்றும் சுபாவம் ஸ்திரீகளுக்கு மட்டும் ஏற்பட்டதில்லை; புருடருக்கும் அங்ஙனமே அத்துர்க்குணமும் ஏற்பட்டிருப்பதால் தற்காலத்திய பத்திரிகைகளில் ஸ்திரீகளை மட்டும் இழித்துக்கூறுவது இழுக்காகும். ஸ்திரீகளும் இத்தகைய வியாஸங்களை வாசிக்கலாம். ஆகையாலும், உண்மையாய் ஸ்திரீகள் தான் கெட்டவர் புருடன் எப்போதும் நல்லவர் என்றில்லையாகையாலும், ஒரு பாலாரை இகழ்வது அவ்வளவு சிலாக்கியமில்லையென்று தோன்றுகிறது.

---

## புத்தக விமர்சம்

**மீராபாயீ, ஓர் இனிய நாடகம், புரொபஸர் ஆர். சினிவாசன் அவர்கள் எம். ஏ., எம். ஆர். ஏ. எஸ். ஸ்ரீமான் சுந்தரசர்மா அவர்களுடைய சித்திரவிளக்கங்களுடன் கூடியது விலை ரூ 1-4-0.**

அங்கங்கள் நான்கும் களங்கள் 19 ம் அடங்கிய இந்த ரூபகமானது பல மாதங்களாய் எமது பூர்ண சந்திரோதயத்தில் வெளிவந்தது என்று நேயர்கள் அறிவார்கள். அவ்வப்போது வெளிவந்த பாகங்களைப்படித்த நேயர்கள் எவ்வளவு ஆவலுடன் அடுத்த சஞ்சிகையின் வரவை எதிர்பார்த்திருந்தார்கள் என்பதும் எமக்குத் தெரியும். மீராபாய் சிறந்த பக்தை. தன் குயிலினுமினிய கானத்தால் எப்போதும் ஸ்ரீகிருஷ்ண பகவானை ஸ்தோத்திரம் பண்ணுவதிலும் பகவத் குணங்களைக் கல்லும் கரையும்படி பாடி தான் ஆனந்த பரவசம் ஆனதும் அன்றி, பண்டித பாமரர்களனைவரும் ஆனந்த பரவசமாகும்படி செய்வதிலும் காலத்தைக்கழித்தாள். முதலில் கலியாணம் செய்து கொள்ள இஷ்டமில்லாதவளாயிருந்தாலும் பெற்றோர் வார்த்தைக்கிணங்கி கல்யாணம் செய்து கொண்டாள். கணவனைக் கண்ணனாகவே பாவித்து ஆச்சரியகரமான பதி பக்தியுடன் நாசலித்து வந்தாள். பகவத் பக்தியும் பதிபக்தியும் ஒருங்

கேயிருத்தல் கூடும் என்ற உண்மையை இவ்வுத்தமி தன் சரிதையில் காண்பித்தாள். அவளுடைய ஸபத்நியான சுந்தரிபாயும் மிகவும் ரூபவதி, ஸங்கீத முதலிய கலைகளில் தேர்ந்தவள். அரசனுடைய பட்டமகிஷி. அவளிடத்தில் அரசன் அதிகமான பிரேமை கொண்டிருந்தான். ஆனால் மீராபாயின் அவியாஜமான அன்பில் அரசன் ஈடுபட்டு இருவரையும் நேசிக்கலானான். மீராபாயின் பிரேமையின் மகிமையால் அரசனுடைய சுபாவமும் மேன்மையடைந்து வந்தது. ஆனால் சுந்தரீபாயின் அகங்காரம் மேலிட்டது. அரசனது அன்பை முன்போல் தன்னிடம் இருத்தவும், மீராபாயை வெறுக்கவும் செய்யவேண்டும் என்ற கெட்ட எண்ணம் கொண்டு அரசனுடைய அகங்காரத்தைக் கிளப்புகிறாள். சுத்த நிர்மலமான ஹிருதயத்தையுடைய மீராபாயின் பேரில் அரசனைச் சந்தேகம் கொள்ளும்படி தூண்டுகிறாள். அரசன் அவ்வலையில் சிக்குண்டு பலவகையில் மீராபாயைத் துன்புறுத்துகிறான். அரண்மனையை விட்டுத் துரத்துகிறான். கடைசியில் தற்கொலை செய்து கொள்ளும்படி சொல்லுகிறான். பதிவிரதையான மீராபாய் இணங்குகிறாள். தேவதையின் பிரசாதத்தால் அவள் காப்பாற்றப்படுகிறாள். அப்பால் சுந்தரியும் அரசனும் மீராபாயின் அவ்வியாஜபக்தியையும் ஸபர்சவேதியைப் போல் தொட்டதையெல்லாம் தங்கமாக்கும் சுவாவத்தின் மகிமையையும் அறிந்து கடைசியில் அவளை மன்னிப்புக் கேட்கிறார்கள். கதை மங்களகரமாய் முடிகிறது. மீராபாயைக் கொல்லும்படி அரசனால் ஏவப்பட்ட இரண்டு கொலையாளிகள் கொல்ல மனமெழாமல் தம்துர் எண்ணத்தை அவ்வம்மணியிடம் தெரிவித்துவிட்டு அவளிடம் விடையும் ஆசீர்வாதமும் பெற்று, வேறு ஊர் சென்று சில்லரைக்கடை வியாபாரிகளாகிறார்கள். அவர்களுடைய உண்மையாலும் யோக்கியதையாலும் அவ்வூர் ஜனங்கள் அவர்களை நன்றாய் ஆதரிக்கிறார்கள். மீராபாயை அவர்கள் குலதெய்வமாய்க் கொண்டாடுகிறார்கள்.

இவ்விஷயங்கள் எல்லாவற்றையும் அழகிய நாடகரூபமாய் அமைத்திருக்கும் ஆசிரியர் இனிமேலும் அநேகம் நாடகங்களை எழுதும்படி நாம் பிரார்த்திக்கிறோம். இந்நாடகத்தை யாவரும் வாங்கிப் படித்து ஆனந்தமும் புண்ணியமும் பெறுவார்களாக.

யக்ஞோபவீதம் அல்லது பூணூல்—பி. எஸ். ராமசுப்பையர் 6 பை- பூணூல் தரிக்கும் ஜாதியார் ஏன் அதைத்தரிக்கிறார்கள் என்று கேட்டால் அநேகமாய் அறியமாட்டார்கள். இந்நூல் சூக்ஷ்ம

காரண சரீரங்களை அடக்கியாண்டு சுத்தமாக்கவேண்டுவது அப்பு னூலின் மூவடக்கங்களின் ஒரு அருத்தம் என்று குறிப்பிட்டிருக்கிறது. மூன்று சரீரங்களை எப்படியும் அடக்கிசுத்தப்படுத்துகிறது என்றும் காட்டியிருக்கிறது. இது நல்ல துண்டுப்பத்திரிகை.

மகா மாயன் அல்லது மனம்போல் மாங்கல்யம் பெற்ற மாங்காளனந்தம்— ஓர் இனிய தமிழ்நாவல். அருப்புக்கோட்டை சு. ஆ. முத்துநாடார் எழுதியது. அணா 12. தற்காலத்திய ராஜீய சீர்திருத்தக் கிளர்ச்சியால் குறிப்பிக்கப்பட்ட கருத்துக்களடங்கிய கற்பனைக்கதை யிது. பொழுதுபோக்குக்கு யாவரும் எளிதில் படித்து முடிக்கக்கூடியது. இதன் விற்பனை யிலிருந்து கிடைக்கும் தனத்தை வித்யாபிவிருத்தியின் பொருட்டு உபயோகிக்கப் போவதாகச சொல்வதால் இதனை வாங்கிப் படிப்போர் வித்யா தர்மத்துக்கும் உதவி புரிவாராவர்.

---

## சமாசாரம்.

ஆலங்குடி சமாசாரம்:— பிரஹ்மஞான சபை அங்கத்தினரான மகா-ள-ள-ஸ்ரீ கே. எஸ். இராமசந்திரையர் அவர்கள் இவ்விடம் ஆலங்குடிக்கு வந்த 1915-ம்௵ நவம்பர் மாதத்திலேயே இந்த சமஸ்தான மகா-ள-ள-ஸ்ரீ தர்பார் அவர்களுக்கு சமஸ்தான காலேஜ், மற்ற மத்தியதர பள்ளிக்கூடங்கள், பிரதம சிக்ஷைப்பாடசாலைகள இவைகளில் மதசம்மந்தமாகவும் நல்லொழுக்க சம்மந்தமாகவுமான கல்வியைக கற்பித்தல், அவசியமென்றும், அதற்குத் தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் கோரி மனுச்செய்து கொண்டமேல், மகா-ள-ள-ஸ்ரீ தர்பார் அவர்கள் அது விஷயமாய் ஆலோசித்து அவ்விதக் கல்வி சம்மந்தமான விஷயங்களுக்கு அட்டவணை தயார் செய்து அனுப்பும்படியாக சமஸ்தானக் கல்வி இலாகா அதிகாரியையும் ஷை. கே. எஸ். இராமசந்திரையரையும் மற்றும் 3 கனவான்களையும் கமிட்டியாக ஏற்படுத்தி யிருந்ததில் ஷை கமிட்டி இரண்டு தடவைகூடி ஒரேமனதுடையவர்களாய் அட்டவணை தயார் செய்தும் மேற்படி அட்டவணையில் கண்ட விஷயங்கள் சம்பந்தமான புஸ்தகங்களைப்பற்றியும் மகா-ள-ள-ஸ்ரீ தர்பார் அவர்களுக்கு 1918ம் ௵ ஆரம்பத்தில் தெரிவித்திருந்ததில் நாளிதுவரை யாதொரு அனுகூல உத்திரவும் கிடைக்கவில்லை. நாளிது௴ 13௳ யன்று புதுக்கோட்டையில் இந்த

சமஸ்தானம் புஸ்தகசாலை, வாசகாலை இவைகளின் 2-வது மகா நாடு நடந்த காலத்தில ஸ்ரீமான் கே. எஸ். இராமசந்திரையர் மத சம்மந்தமான படிப்பை, சமஸ்தான பள்ளிக்கூடங்களில் கற்பித்தல் அவசியமென்பதைச் சுருக்கமாய் எடுத்துப் பேசினதுடன் தான் இதற்கு முன் இது விஷயமாய்ச் செய்திருக்கும் முயற்சியைப்பற்றியும் தெரியப்படுத்தி அடியிற்கண்ட தீர்மானத்தை ஷை மகாநாட்டின் ஆலோசனைக்குக் கொண்டு வந்தார். அநேக கனவான்கள் அதை ஆதரித்துப் பேசினார்கள். அக்கிராசனம் வஹித்த ஸ்ரீமான் கே. எஸ். இராமசாமி சாஸ்திரிகள் அவர்களும இதை ஆதரித்து முடிவுரை கூற, ஷை தீர்மானம் எல்லோராலும ஒப்புக்கொள்ளப்பட்டது.

தீர்மானம்:—இந்த மகா நாடானது ஸமஸ்தானக்கல்லூரி, மத்தியதர பிரதமசிக்ஷைப் பாடசாலைகளில் ஆதமார்த்த சம்மந்தமான கலவி கறபிக்க சீக்கிரம ஏறபாடு செய்ய வேணுமாய் மகா-ா-ா-ஸ்ரீ தர்பார் அவர்களை பிரார்த்திக்கிறது.

மேலும் ஷை. கே. எஸ். இராமசந்திரையர் மதசம்மந்த மான கலவி அவசியமென்பதைப்பற்றி ஒரு வியாசமெழுதி அச்சிட்டு அதை சமஸ்தான ஜனங்களின் பிரதிநிதிகளில் (member, of the representative assembly) ஒவ்வொருவருக்குமனுப்பி இதைப் பற்றி யோசனை செய்து ஷை பிரதிநிதிகளை எல்லோரும் ஏகோபித்து மகா-ா-ா-ஸ்ரீ தர்பார் அவர்களை மனு மூலமாய்ப் பிரார்த்தனை செய்யுமபடியாகவும கேட்டுக்கொண்டிருப்பதாகவும் அறிய திருப்திகரமாகயிருக்கிறது. இவர் பிரயத்தினம சீக்கிரம் கை கூடுமென்று நமபுகிறோம அவ்விதம ஸர்வே சிவரன் அருள்புரிவாராக.

காரைக்குடி ஹைஸ்கூல் மனேஜர் மகா-ா-ா-ஸ்ரீ சிதம்பரஞ் செட்டியார் அவாகளுக்கு மதசம்மந்தமான கல்வி கற்பிகக வேண்டிய விஷயமாய் புதுக்கோட்டை கமிட்டியார் தயாா செய்த அட்டவணையை இவா அனுபபி அந்தபபடி பாடம் கறபிக்கச் செய்ய லாமெனறு தெரிவித்திருந்தார். அவாகள அடுத்த பளளிககூட வருஷ முதல் ஷை அட்டவணையை அநுசரிதது ஷை பளளிக்கூடத்தில் கலவி கற்பிக்க ஏற்பாடு செய்வதாகக் கேட்க சந்தோஷமாக யிருக்கிறது. இவ்விதம் மதுரை கல்லூரியிலும்— அதைச சேர்ந்த பாடசாலைகளிலும் ஷை மதசம்மந்தமான கலவி கறபிகக வேணுமென்று ஷை யார் ஏற்கனவே செய்திருக்கும் முயறசியும் அனுகுலமாகும்படி கடவுள அருளபுரிவாராக, சுபமஸ்து.

# வைத்யரத்ன பண்டிட் டி. கோபாலா சார்லுவின் சிறந்த ஆயுர்வேத ஔஷதங்கள்.

நன்ருகப் பரீட்சிக்கப்பட்டது !

சென்ற இருபத்தைந்து வருஷங்களாக எல்லோராலும் உபயோகிக்கப்பட்டது !!

## பிளேக் மருந்து

1. எல்லாவித பிளேச் ஜவரங்களுக்கும் ஸஞ்சீவினி இதுவே.

2. முன் சாப்பிட்டால் பிளேக் வியாதியை வராமல் தடுக்கும்

விலை பெரியசெட் ரூ 2—2—0
,, சிறிய ,, ரூ 1—6—0

## காலரா மருந்து.

1. இந்த ஔஷதத்திஞல் காலரா விலகிப்போகும்.

2. சீக்கிரத்தில் வாந்தியையும் பேதியையும் போக்கும்.

விலை பெரிய செட் ரூ 1—2—0
,, சிறிய ,, ரூ 0-12—0

## ஜீவாமிருதம்.

1. ஹிந்து தேசத்தில் நல்ல மூலிகைகளாலும் உலோகங்களாலும் தயார் செய்யப்பட்டது

2. ஆரோக்கியத்தையும் தைரியத்தையும் உண்டாக்கும்.
3. பலத்தையும் உத்ஸாகத்தையும் விர்த்தியாக்கும்.

விலை பெரிய சீசா ரூ 3—4—0
,, சிறிய ,, ரூ 1-12—0

## அமிருதாமலக தைலம்.

1. வித்யார்த்திகளுக்கும் யோசனை ஜாஸ்தியுள்ளவர்களுக்கும் அதி உபயோகமானது

2. நேத்திரரோகிகளுக்கும் சிரோ ரோகிகளுக்கும் ரொம்பவும் ஹிதமானது.

விலை பெரிய புட்டி ரூ 1—0—0
,, சிறிய ,, ரூ 0—8—0

பலவித வியாதிகளுக்கும் இவ்விடத்தில் மருந்துகள் கிடைக்கும். காட்லாக்கு இனமாக அனுப்பப்படும்.
தபால சார்ஜும், பாக்கிங் கூலிகளும் பிரத்தியேகம்.
வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக் கொள்ளவும்:—

மானேஜர்,
ஆயுர்வேதாசிரமம்
55 ஆச்சாரப்பன் தெரு,
மதராஸ்.

# ஜகப் பிரசித்தி பெற்ற

# ஜிண்டான் மாத்திரை.




எண்ணிலாக்குணங்கள் நிரம்பிய இந்த ஜிண்டானை இப்போதே உபயோகியுங்கள். எல்லாக் காலத்திலும் யாவராலுமே நன்கு மதிக்கப் பெற்று நாடெங்கும் பரவி பல பல வியாதிகளைக் கண்டித்தும் ஆரோக்கியத்திற்கும் ஆனந்தத்திற்கும் கைகண்ட முக்கியவிசேஷ குளிகைகள். இன்புளுயென்சா முதலிய கொடிய தொத்து வியாதிகளை அணுகவொட்டாமல் தடுப்பதற்கு இம் மாத்திரைகள் நிரம்பவும் குணமானவைகள்.

யாவரும் சுலபத்தில் அடையும்படி எல்லாக் கடைகளிலும் வியாபாரிகளிடத்திலும் எப்போதுமே விசாரிக்கப் பெறலாம். விலையோ சரசம்.

380 மாத்திரையும் கண்ணாடி பதித்த அந்தமான டப்பியுள்ள பாக்கெட் ரூ. 1. 90 மாத்திரையும் சாதா டப்பியுடன் பாக்கெட்டுக்கு 4 அணா. 20 மாத்திரை பொட்டணம் 1 அணா.

ஸோல் ஏஜண்டுகள்:—

## எஸ். வைத்தியா அண்டு கோ.,

மதராஸ்.

பிராஞ்சிகள்:—திருச்சிக்கோட்டை & பங்களூர் ஸிடி. & கொழும்பு

N. B. ஸகல குடும்ப மருந்துகள், பேடெண்டுகள், டாய்லெட்கள், பாலாமிருதம், மேலான பன்னீர், பல்பொடி, கூந்தல் தைலம், இங்கோ எஸ்ஸென்ஸ், பித்தளை மெழுகு வத்திஸ்டாண்டுகள், முதலிய பலவகை சுதேசிய சாமான்களுக்கும் ஏஜண்டுகள்.

எங்கள் மதுரை ஏஜண்டு:—

**V. சின்னகிருஷ்ண நாயுடு,**

ஸ்ரீ கிருஷ்ணராஜா அண்டுகோ, மேலக்கோபுர வீதி, மதுரை.